DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.

***CC.No. 108 /2024 – P.W.8 (LW 10)***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியம்மாள் | வயது | 52 |
| கணவர் பெயர் | பாலசங்கர் | ஜாதி | |
| தொழில் | உதவி ஆய்வாளர், நன்னிலம் அனைத்து மகளிர் காவல்நிலையம் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

**Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 06.03.2026**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் தற்போது நன்னிலம் மகளிர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 30.08.2022 அன்று காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு. முருகானந்தம் பதிவு செய்ய வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே சம்பவ இடத்தை சாட்சிகளான ரமேஷ்குமார் மற்றும் கபிலன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான குந்தவைநாச்சியார், பாக்கியராஜ், கருணாநிதி மற்றும் மலர்விழி ஆகிய 1 முதல் 4 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து அன்றையதினமே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 குந்தவைநாச்சியாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களான டாக்டர் பிரபா மற்றும் நித்தியா ஆகியோரை விசாரணை செய்து கடந்த 17.11.2022 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவர்களிடமிருந்து சாதாரண காயம் என காயச்சான்று பெற்றுள்ளேன். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம் அவர்களை விசாரித்து விசாரணை வாக்குமூலம் பதிவு

செய்துள்ளேன். விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிந்து திருவாரூர் புலிவலம் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்த எதிரியை கைது காரணம் கூறி கடந்த 30.08.2022 அன்று 14.00 மணியளவில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எனது புலன் விசாரணை முடித்து சாட்சிகளின் விசாரணை மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் கடந்த 17.11.2022 அன்று சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 323, 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரரான குந்தவை நாச்சியாரின் தந்தை வி.சி.க கட்சியை சேர்ந்த முக்கிய பிரமுகர் என்றால் அது தொடர்பாக எனக்கு தெரியாது. மேற்படி புகார்தாரரின் தந்தை காவல்நிலையத்திற்கு அடிக்கடி வருவார் என்றால் நான் அவ்வாறு பார்த்ததில்லை. சம்பவமானது 28.08.2022 ம் தேதி இரவு 8.30 மணிக்கு நடைபெற்றதாக கூறியுள்ளபோது ஒரு நாள் காலதாமதமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டதற்கான காரணத்தை தெரிந்து கொண்டேனா என்றால் பாதிக்கப்பட்ட பெண் அச்சத்தின் காரணமாகவும், அவரது தந்தை சம்பவத்தன்று உடன் இல்லாத காரணத்தாலும், உடனடியாக மருத்துவமனைக்கு அவர் செல்லவில்லை என விசாரணையில் தெரிந்து கொண்டேன். நான் புகார்தாரர் அச்சத்தில் இருந்ததாகவும், சம்பவத்தன்று அவரது தந்தை உடன் இல்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

புலிவலம் கிராமத்திற்கும், திருவாரூர் அரசு மருத்துவமனைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 6 கி.மீ தூரம் இருக்கும். புலிவலத்தில் இருந்து சின்ன ஆஸ்பத்திரி எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ இருக்கும். கைது செய்யப்பட்ட எதிரிக்கு கைதின் போது எவ்வித காயமும் இல்லை என்றால் முன் மண்டையில் தையல் பிரிந்த காயம் இருந்தது. வேறு எந்த காயமும் இல்லை. எதிரி மன்னார்குடியில் 2020– 2021 ல் நடைபெற்ற ஆண் அழகன் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றவர் என்ற விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இந்த வழக்கிற்கு அவசியம் இல்லாததால் அது குறித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. எதிரியும், புகார்தாரரும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. புலிவலம் மாரியம்மன் கோவில் என்பது மூன்று பிரிவாக உள்ள தெருவாகும். முதல் பிரிவில் புகார்தாரர் உள்ளார். மூன்றாவது பிரிவில் எதிரி வசித்து வந்தார்.

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மற்றும் சாட்சியங்களில் மேற்படி மாரியம்மன் கோவில் மூன்று பிரிவாக உள்ளது குறித்தும், அதில் எங்கெங்கு எதிரியும், புகார்தாரரும் வசித்து வந்தார்கள் என்பது குறித்து கூறப்படவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு நாட்குறிப்பில் அது தொடர்பாக பதிவு செய்துள்ளேன். மேற்படி வழக்கு நாட்குறிப்பை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் மாரியம்மன்கோவில் தெரு பிரிவுகள் குறித்து எனது வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை என்பதாலேயே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரும், எதிரியும் காதலித்து வந்தது குறித்து எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு காதலித்து வந்ததாக விசாரணையில் தெரியவில்லை.

புகார்தாரரும், எதிரியும் அடிக்கடி வேளாங்கண்ணிக்கு சென்று வந்திருந்த நிலையில், ஒருமுறை வேளாங்கண்ணிக்கு பைக்கில் சென்றபோது காவனூர் செக்போஸ்ட்டில் தடுத்து நிறுத்தப்பட்டு தாலுக்கா காவலர்களால் புகார்தாரரின் தகப்பனாருக்கு தகவல் அளிக்கப்பட்டது என்றால் உண்மையல்ல. மேற்படி சம்பவத்திற்கு பிறகு எதிரியுடன் புகார்தாரர் எவ்வித பேச்சு வார்த்தையும் இல்லாமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காகவே புகார்தாரரின் தகப்பனார் புகார்தாரர் மூலம் பொய் புகார் கொடுத்து அதன்பேரில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டு முறையான விசாரணையின்றி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரியை நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.